# வவுனியா சிவில் நிர்வாகம் விரைவில் மாற்றம்?
# அரசாங்க அதிபர் கொழும்புக்கு அழைப்பு!

Registered as a Newspaper in Sri Lanka விலை: ரூபா ஒன்று

# ஈழமுரசு

முரசு 2 22-11-85 வெள்ளி (கார்த்திகை 7 ரபியு அவ் 9) முழக்கம் 287

(வவுனியா)

வவுனியா மாவட்டத்தின் சிவில் நிர்வாகத்தில் சில பாரியமாற்றங்கள் விரைவில் கொண்டுவரப்படலாமென்று நம்பகரமான வட்டாரங்கள் மூலம் தெரியவந்துள்ளது. பாதுகாப்புடன் சம்பந்தப்பட்ட உயர் அதிகாரி தரத்தைச் சேர்ந்த ஒருவர் இம்மாவட்டத்தின் நிர்வாக வேலைகளுக்குப் பொறுப்பாக நியமிக்கப்படலாம் என்று தெரிகின்றது. முகாமொன்றுடன் சம்பந்தப்பட்ட அதிகாரியொருவர், சிவில் நிர்வாகங்களை தமது அலுவலகத்திலிருந்தே கவனிக்கக் கூடியவிதத்தில் இம்மாற்றங்கள் அமையுமென்றும், வவுனியா அரசாங்க செயலகம், பாதுகாப்புத்துறை ஆகியவற்றின் இணைப்பு அதிகாரியாகவும் அவரே கடமையாற்றலாமெனவும் கூறப்படுகிறது. வவுனியா அரசாங்க அதிபரின் பங்களாவில் அண்மையில் இடம்பெற்ற சம்பவமொன்றே இம்மாற்றங்களுக்குக் காரணமென்று தெரிகின்றது, வவுனியா அரசாங்க அதிபர் திரு. கே. வி. லோகேஸ்வரன் தற்போது கொழும்புக்கு அழைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிகின்றது.

# வடக்கும் கிழக்கும் இணையாத
# எந்த சபையிலும் வேலையில்லை!

## தமிழீழக் குழுக்களின் தீர்க்கமான முடிவு விரைவில் புதுடில்லிக்கு அறிவிக்கப்படும்

### அமிர்தலிங்கம் சிறப்புப் பேட்டி

(சென்னை)

ஈழத் தமிழரின் பாரம்பரிய பிரதேசங்களான வடமாகாணமும் கிழக்கு மாகாணமும் இணைந்து உருவாகாது எந்தச் சபையினாலும் தமிழ் மக்களுக்கு எந்த நன்மையும் கிடைக்கப்போவதில்லை. இந்த நிலையில் அவ்வாறான எந்த அமைப்பையும் ஏற்கும் நிலையில் தமிழர் எவருமில்லை என்று கூட்டணிச் செயலதிபர் திரு. அ. அமிர்தலிங்கம் 'ஈழமுரசு'க்கு அளித்த சிறப்புப் பேட்டியில் தெரிவித்தார்.

திருமலை மாவட்டத் தமிழர்களை அங்கிருந்து வெளியேற்றிவிட்டு, அதனை ஒரு சிங்களப் பிரதேசமாக்க அரசாங்கம் எடுத்துவரும் நடவடிக்கைகளையும் திரு. அமிர்தலிங்கம் வன்மையாகக் கண்டித்தார்.

"தமிழ்த் தலைவர்கள் இன்னமும் தங்கள் ஆலோசனையைத் தெரிவிக்கவில்லை" என்று பாரதப் பிரதமர் ராஜீவ் காந்தி நேற்று முன்தினம் தெரிவித்தது பற்றிக் கேட்டபோது, "தமிழ் மக்கள் 1977ம் ஆண்டு பொதுத்தேர்தலில் தமிழீழம் அமைக்கவே எமக்கு அங்கீகாரம் வழங்கினார்கள். எனவே அதனிலும குறைவான எதயுனம் கேட்கும் நிலையில் நாம் இல்லை" என்று திரு. அமிர்தலிங்கம் தெரிவித்தார்.

### ★ இலங்கையின் திட்டத்தை நாம் ஏற்கவில்லை!

இலங்கை அரசு சமர்ப்பித்த நகல் திட்டத்தை நாம் ஏற்கவில்லை. இதனை டில்லி அதிகாரிகளிடமும், பிரதமரிடமும் நாம் ஏற்கனவே தெரிவித்து விட்டோம் என்று சொன்ன திரு. அமிர்தலிங்கம், மிகககுறைந்த பட்சக் கோரிக்கையைக் கூட இது வழங்கவில்லையே என்றும் சொன்னார்.

"சர்வகட்சி மகாநாட்டில் தெரிவிக்கப்பட்ட மாகாணசபை யோசனை, அப்போதே எம்மால் நிராகரிக்கப்பட்டு விட்டது. இதனையே மீண்டும் புதிய உருவத்தில் இலங்கை அரசு டில்லிக்கு அனுப்பியுள்ளது." என்றும் அவர் குறிப்பிட்டுச் சொன்னார்.

### ★ மாற்று யோசனை தந்தால் பரிசீலிப்போம்

தமிழீழக் கோரிக்கைக்கு மாற்றாக, வடக்கும் கிழக்கும் இணையும் ஏதாவது ஒரு அமைப்பை உருவாக்கும் யோசனையை இலங்கை அரசு சமர்ப்பித்தால் அதனைப்பற்றி தமிழீழக் குழுக்களால் பரிசீலனை செய்ய முடியுமென்றும் சொன்ன திரு அமிர்தலிங்கம், இத்தனை இழப்புகளின் பின்னர் தனித்தனியான மாகாணசபைகளை ஏற்பதென்பது எந்தச் சந்தர்ப்பத்திலும் முடியாத காரியமென்றார்.

தமிழர் விடுதலைக் கூட்டணி, ஈழம் தேசிய விடுதலை முன்னணி, தமிழீழ மக்கள் விடுதலைக்கழகம் ஆகிய அனைத்து தமிழீழ விடுதலை அமைப்புகளும் அடிக்கடி ஒன்றுகூடி நிலைமையை ஆராய்ந்து ஏகமனதாகவே முடிவுகளை எடுத்து வருவதாகவும், தொடர்ந்தும் அவ்வாறே நடைபெறுமென்றும் அவர் மேலும் தெரிவித்தார். ...6ம் பக்கம் பார்க்க.

## கொர்பசெவ் அமெரிக்கா ரீகன் சோவியத் செல்வர்

(ஜெனிவா)

சோவியத் தலைவர் கொர்பசெவ் அடுத்தாண்டு அமெரிக்காவுக்கு விஜயம் செய்வார். அமெரிக்க ஜனாதிபதி ரீகன் சோவியத்ரஷ்யாவுக்கு 1987ம் ஆண்டு விஜயம் செய்வார்.

ஜெனிவாவில் முடிவடைந்த இரு தலைவர்களதும் பேச்சு வார்த்தையையடுத்து விடுக்கப்பட்ட அறிக்கையில் இவ் விபரம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இரு நாடுகளும் ஆயுதக் கட்டுப்பாடு தொடர்பான இணக்க நடவடிக்கைகளைத் துரிதப்படுத்துவதென்றும் இரு தலைவர்களதும் இரண்டு நாள் பேச்சு வார்த்தையின் போது தீர்மானிக்கப்பட்டது.

## அகதிகளுக்கான மருந்தை ஆயுதப்படை பறித்தது

[மன்னார்]

மன்னார், அகதிகள் புனர்வாழ்வுக்கழகம் விடுத்த அவசர வேண்டுகோளைத் தொடர்ந்து 'சற்றடே றிவியு' பத்திரிகை நிறுவனத்தினரின், நிவாரண நிதியிலிருந்து வாங்கி அனுப்பப்பட்ட ரூபா இருபதினாயிரம் பெறுமதியான மருந்து வகைகளை முருங்கனில் ஆயுதப் படையினர் கடந்த பதினைந்தாம் திகதி பறிமுதல் செய்தனர்.

இம் மருந்துப் பொதியை எடுத்துச் சென்ற இ. போ. ச பஸ்வண்டியின் சாரதி ஆதிநாதன் தயாளனும், நடத்துனர் மயில்வாகனம் அமிர்தலிங்கமும் கைது செய்யப்பட்டனராயினும் மறுநாளே மன்னார் அரசு அதிபரின் முயற்சியினால் — 6ம் பக்கம் பார்க்க

## 4 மாதத்தில் 6873 அகதிகள் தமிழகம் சென்றுள்ளனர்

(புதுடில்லி)

இவ்வருடம் ஜூலை மாதம் 25ம் திகதியிலிருந்து இம்மாதம் 19ம் திகதிவரை இலங்கையிலிருந்து 6,873 தமிழர்கள் அகதிகளாகத் தமிழகத்திற்கு வந்துள்ளதாக இந்திய மத்திய உள்துறை ராஜாங்க அமைச்சர் திரு, அருண்சிங் இந்திய ராஜ்யசபாவில் நேற்றுத் தெரிவித்தார்.

திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த ராஜ்யசபா உறுப்பினர் திரு. கோபால்சுவாமியின் கேள்வி ஒன்றிற்கு பதிலளிக்கையில் இதனைத் தெரிவித்த திரு. அருண்சிங், — 6ஆம் பக்கம் பார்க்க

## "அன்புள்ள பயணி அறிவது!" தடை முகாமில் நோட்டீஸ்

பாதுகாப்புப் படையினரின் தடைமுகாம்களில் சோதனைக்குள்ளாகும் பயணிகளும் இச்சோதனை சம்பந்தமாக தமது ஆலோசனையை வழங்கலாம என பிரயாணிகளுக்கு பாதுகாப்புப்படையினரால் தமிழ் ஆங்கிலம் ஆகிய மொழிகளில் வழங்கப்பட்டுள்ள துண்டுப் பிரசுரங்களில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இத்தகைய ஆலோசனைகளை எழுத்து மூலம் பாதுகாப்புப் படைகளின் தளபதி அல்லது பிரதேச இணைப்பு அதிகாரிக்கு சமர்ப்பிக்கலாம் எனவும் அதில் மேலும் கூறப்பட்டுள்ளது.

'அன்புள்ள பயணி', என விழித்து எழுதப்பட்டுள்ள இத் துண்டுப் பிரசுரத்தில்,சோதனை நடத்துவது உங்களுக்கு ... 6ஆம் பக்கம் பார்க்க

## காசு, தபாற்கட்டளை மூலமே புகையிரத டிக்கட் விற்பனை

(கொடிகாமம்)

கொடிகாமம் புகையிரத நிலையத்தில் கடந்த புதன்கிழமை இடம்பெற்ற கொள்ளைச் சம்பவத்தை அடுத்து இந்நிலையத்தில் பயணச்சீட்டு விநியோகத்திற்கு பணம் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாதென அறிவிக்கப்பட்டுள்ளது.

புகையிரத திணைக்களபொது முகாமையாளரின் பெயருக்கு எழுதப்பட்ட காசுக்கட்டளை, தபால் கட்டளை, புகையிரத ஆணைப்பத்திரங்கள் ஆகியவற்றுக்கு மட்டுமே பயணச் சீட்டு இந் நிலையத்தினூடாக வழங்கப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

கொள்ளை நடைபெறும் மற் ...6–ஆம் பக்கம் பார்க்க

தமிழ் மக்கள் விரும்பிப் படிக்கும் பத்திரிகை ஈழமுரசு

## வரி விளம்பரம்

### மலிவு விற்பனை

நெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியில் நடைபெறும் மாபெரும் பொருட்காட்சியில் அமைந்துள்ள மில்க்வைற் காட்சிச்சாலையில் ரூபா. 15/-ற்கு மேல் மில்க்வைற் தாயாரிப்புகளை வாங்கும் அன்பர்களுக்கு வீட்டுத்தோட்ட விதைகள், பொலித்தீன் பை, அறிவு நூல்கள் அன்பளிப்பாக வழங்கப்படும். மில்க்வைற் மேலுறைகள் சேகரித்து வைத்திருக்கும் அன்பர்கள் அவற்றைக்கொடுத்து பரிசில்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

— மில்க்வைற், யாழ்ப்பாணம்.

## மூவர் சித்தி

இவ்வாண்டு நடைபெற்ற 5 ம் தரத்திற்கான புலமைப் பரிசில் பரீட்சையில் வேலணை சரஸ்வதி வித்தியாசாலையில் தோற்றிய மாணவர்களில் செல்வி இ கலைமகள் செல்வி. செ. சுகிர்தா, செல்வன் த. உதயணன் ஆகியோர் சித்தியடைந்துள்ளனர்.

செல்வி கலைமகள் வேலணை கல்விவட்டாரத்தில் அதிக கூடிய புள்ளி எடுத்தவர் என்ற சிறப்புடன் அகில இலங்கை ரீதியிலும் 7 ம் இடத்தைப் பெற்றுள்ளார்.

**வியாபாரம்பெருக விளம்பரம் செய்க**

## கிறிஸ்தவ சங்கீர்த்தனம்

(நல்லூர்)

யாழ்ப்பாண கிறிஸ்தவ ஐக்கிய சங்கத்தின் ஆதரவில் திருமதி. பரமேஸ்வரி விஜயரத்தினம் அவர்களினால் ஆக்கப்பட்ட "கிறிஸ்தவ சங்கீர்த்தன மாலை" என்னும் நூல் வெளியீட்டு விழா யாழ். றிம்மர் மண்டபத்தில் இம் மாதம் 25ந் திகதி திங்கட்கிழமை மாலை நடை பெறவிருக்கிறது.

யாழ். கிறிஸ்தவ ஐக்கிய சங்கத்தலைவர் திரு. யே. ஜி. அரசரத்தினம் தலைமையில் நடைபெறும் இந்த வெளியீட்டு விழாவில் "சங்கீர்த்தனமாலை" பக்கவாத்தியங்களுடன் பாடி வெளியிட்டு வைக்கப்படும். இதற்கான ஏற்பாடுகளை சங்கச் செயலாளர் அருட் திரு. யே. சர்வானந்தன் அடிகளார் செய்துள்ளார்.

## யாழ்தேவி பளையில் தரிக்காது

[கொடிகாமம்]

யாழ்தேவி புகையிரதம் இனிமேல் பளை புகையுரத நிலையத்தில் நிறுத்தப்படமாட்டாதென புகையிரதப் பகுதியால் அறிவிக்கப்பட்டுள்ளது. அதே வேளை அன்று முதல் இப்புகையிரதம் சாவகச்சேரி புகையிரத நிலையத்தில் நிறுத்தப்படுமெனவும் அவ் அறிவித்தலில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பிறந்த நாள் வாழ்த்து

❋ ஆவரங்கால், மாக்கற் லேன் தவராஜா மலாராதேவி தம்பதியின் மகன் திலாகர் இன்று முதலாவது பிறந்த நாளைக் கொண்டாடுகின்றார்.

❋ கிளிநொச்சி திருநகர் அமிர்லிங்கம் பத்மாவதி தம்பதியின் மகள் மேனகாராணி இன்று முதலாவது பிறந்த நாளைக் கொண்டாடுகிறார்.

❋ யாழ். கச்சேரி பாரதி வீதியைச் சேர்ந்த கனகசபாபதி இராசமணி தம்பதியின் மகள் நந்தினி இன்று தனது ஒன்பதவது பிறந்தநாளைக் கொண்டாடுகிறார்.

❋ சுண்டுக்குளி காட்டுக் கந்தோர் ஒழுங்கை சந்திரகுமார் கேதாரதேவி தம்பதியின் புதல்வி ரேகினி இன்று தனது ஐந்தாவது பிறந்த நாளைக் கொண்டாடுகிறார்.

❋ கொக்குவில், தர்மரட்ணம் ரஞ்சினி தம்பதியரின் மகன் பிரசன்ன முதலாவது பிறந்த நாளை இன்று கொண்டாடுகிறார்.

❋ புங்குடுதீவு அன்ரனி மரியதாஸ் ஸ்ரெலா தம்பதியரின் மகன் திலீப்குமார் முதலாவது பிறந்தநாளை இன்று கொண்டாடுகிறார்.

❋ பருத்துர் அந்தோனியார் கோவிலடி, செல்வராஜா தங்கமணி தம்பதியரின் மகன் அகிலன் இன்று ஐந்தாவது பிறந்தநாளைக் கொண்டாடுகிறார்.

❋ யாழ். கோவில் வீதி, ரேச் சரோஜா தம்பதியரின் மகன் கனிசியாஸ் ரெஜீவ் எட்டாவது பிறந்தநாளை இன்று கொண்டாடுகின்றார்.

❋ கட்டுடை, கேலங்காமம் வீதி, அருச்சுணன் சிவக்கொழுந்து தம்பதியரின் மகள் அனுஷியாதேவி இன்று ஒன்பதாவது பிறந்தநாளைக் கொண்டாடுகிறார்.

❋ புலோலி மேற்கு தவராஜா குயீனி தம்பதியரின் மகள் மேர்சி தேவசோபினி இன்று பதின்னான்காவது பிறந்தநாளை கொண்டாடுகிறார்.

❋ ஏழாலை கிழக்கு, தவலோகன் சிறிறன்சினி தம்பதியரின் மகன் நிக்ஷன் மூன்றாவது பிறந்தநாளைக் கொண்டாடுகிறார்.

❋ காரைநகர் வேலுப்பிள்ளை லலிததேவி தம்பதியரின் மகன் சிவரூபன் இன்று மூன்றாவது பிறந்தநாளை கொண்டாடுகிறார்.


## கைத்தொழிற்சாலை இயக்குனர்களுக்கு ஓர் முக்கிய அறிவித்தல்

வட இலங்கையில் கைத்தொழிலில் ஈடுபட்டுள்ளவர்கள் அனைவரையும் எதிர்வரும் 23-11-85 சனிக்கிழமை காலை பத்து மணிக்கு சுண்டுக்குளி 'பாம் கோர்ட்டில்' நடைபெறும் கூட்டமொன்றில் சமுகமளிக்குமாறு வேண்டுகின்றோம்.

அந்தந்த தொழிற்சாலைகளின் அதிபர்கள் அல்லது நிர்வாக இயக்குனர்கள் மட்டுமே சமுகமளிக்க வேண்டும். இக்கூட்டத்தில் முக்கியமாக தற்போது பாதிக்கப்பட்டுள்ள தொழிற்சாலைகளைப் புனரமைப்பது சம்பந்தமாக ஆராயப்படும.

'பாம்கோட்'
202, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.

வட இலங்கை
கைத்தொழில் சம்மேளனம்
NORTH CEYLON
CHAMBER OF INDUSTRIES.



"ஸ்டொப்" கிளட்ச் & பிறேக் புளூயிட்

Hydraulic BRAKE & CLUTCH FLUID

புதிய சில்லறை விலைகள்
450 ml. — 31-50
225 ml. — 17-50




தயாரிப்பு:
CHEMANEX

எல்லா வியாபாரிகளிடமும் கிடைக்கும்

கெமனெக்ஸ் லிமிட்டெட்


## ஓராண்டு நினைவஞ்சலி



அமரர்
**வி. செல்லையா**
கொழும்புத்துறை

தோற்றம்
1901-01-09

மறைவு
1984-12-03

வற்றாத வளமீந்து வாழ வகையீந்து
முற்றிப் பழுத்த முனிவராய் அறிவீந்து
எமை ஆசீர்வதித்த தங்கள் ஓராண்டுப் பூர்த்தியன்று
தங்கள் ஆன்மசாந்திக்காகப் பிரார்த்திக்கும்

மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

## அறிவித்தல்

**கிளிநொச்சி மாவட்டத்தின் கிளிநொச்சிப் பிரிவிற்கான திடீர் மரண விசாரணையாளர் பதவிக்கான நியமனம்**

கிளிநொச்சி மாவட்டத்தின் கிளிநொச்சி பிரிவிற்கான திடீர் மரண விசாரணையாளர் ஒருவரை நியமிப்பதற்காக கீழ் 2ம் பந்தியில் காணப்படும் தகுதிகளை உடைய அபேட்சகர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

கீழக்காணும் மாதிரி விண்ணப்பப் படிவத்திற்கமையப்பெற்ற விண்ணப்பங்கள் 1985 நவம்பர் மாதம் 28ம் திகதி அன்று அல்லது அதற்கு முன்னதாக கிளிநொச்சி அரசாங்க அதிபருக்கு அனுப்பப்படுதல் வேண்டும்.

2. கீழ்க்காணும் தகுதிகளையுடையவர் என்பதற்கு போதிய சான்றுகளைச் சமர்ப்பிக்க வேண்டும்.

(அ) விண்ணப்பங்கள் பெற்றுக் கொள்ளும் திகதியன்று வயது 30க்கு குறையாமலும் 65க்கு கூடாமலும் இருத்தல்.
(ஆ) சிறந்த, தேகாரோக்கியம் உடையவராய் இருத்தல்.
(இ) விண்ணப்பதாரி மேற்குறிப்பிட்ட பிரதேசத்தில் நிரந்தர வதிவாளராய் இருத்தல்.
(ஈ) குறைந்த பட்சம் சிங்களம்/தமிழ் மொழியில் கனிஷ்ட பாடசாலை பத்திரப் பரீட்சையில் சித்தியடைந்திருத்தல்.
(உ) மாதாந்த வருமானம் ரூபா 200க்கோ அதற்கு மேற்பட்டோ இருத்தல்.

3. விண்ணப்பதாரி அவருடைய விண்ணப்பத்துடன் கீழ்க்காணும் சான்றிதழ்களின் பிரதிகளை இணைத்து அனுப்பப்படுதல் வேண்டும்.

(அ) பிறப்புச் சான்றிதழ்.
(ஆ) கிடைக்கப் பெற்ற உயர் கல்வி தகுதிகாண் சான்றிதழ்.
(இ) வதிவிடம் பற்றிய சான்றிதழ்.
(ஈ) வருமானம் பற்றிய தகுதியான சான்றிதழ்.

4. அரசாங்கம், அரசாங்க கூட்டுத்தாபனம், கூட்டுறவு, உள்ளூராட்சி மன்றங்களில் கடமையாற்றுவோரும் இப்பதவிக்கு விண்ணப்பிக்க தகுதி அற்றவர்களாவர். உள்ளூராட்சி மன்றங்கள் பிரதிநிதிகளும் இப்பதவிக்கு நியமிக்கப்படமாட்டார்கள்.

5 விண்ணப்பம் கிடைத்தமை பற்றி அறிவிக்கப்படமாட்டாது. விண்ணப்பங்கள் பதிவஞ்சலில் அனுப்பப்படுதல் வேண்டும்.

செயலகம்,
கச்சேரி,
கிளிநொச்சி,
1985, நவம்பர் 20.

என். ஜயநாதன்.
அரசாங்க அதிபர்,
கிளிநொச்சி மாவட்டம்.

### மாதிரி விண்ணப்பப் படிவம்

**கிளிநொச்சி மாவட்டத்தின் கிளிநொச்சிப் பிரிவிற்கான திடீர் மரண விசாரணையாளர் பதவிக்கான விண்ணப்பம்**

1. விண்ணப்பதாரியின் முழுப் பெயர்:-
2. முகவரி:-
3. நிரந்தர வதிவிடமும், அதில் வதியும் காலமும்:-
4. (அ) விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளும் திகதியன்று வயது:-
   வருடம்: மாதம்: நாள்:
   (ஆ) பிறந்த திகதியும், இடமும்;-
5. விவாகமானவரா / விவாகமாகாதவரா?
6. கல்வித் தகைமைகள்:-
7. தற்போதைய தொழில்:-
8. இதற்கு முன்னர் தொழில் செய்திராயின் அது பற்றிய விபரங்கள்:
9. தமது ஆதனத்தின் பெறுமானமும், விஸ்தீரணமும், விபரங்களுடன்;-
10. மாதாந்த வருமானம்:-
11. விண்ணப்பதாரி ஓர் கடனாளியாயின் அது பற்றிய விபரங்கள்:-
12. விண்ணப்பதாரி ஏதாவது ஒரு குற்றத்திற்காக நீதிமன்றத்தினால் தண்டனைக்கு உட்பட்டவரா?
13. இப்பதவிக்காக பெற்றுள்ள வேறு தகைமைகள் இருப்பின் விபரம்:-

மேற்குறிப்பிட்ட விபரங்கள் சரியானவைகள் என்றும், உண்மையானவைகள் என்றும் இத்தால் உறுதிப்படுத்துகிறேன்.

திகதி:- விண்ணப்பதாரியின் கையொப்பம்.

# கிருமிநாசினி பாவிக்கையில் கையாள வேண்டிய முறை

## விவசாயிகளுக்கு அறிவுறுத்தல்

(வேலணை)

கிருமிநாசினிகளை விவசாயிகள் பயிர்களுக்கு விசிறும் போதும், 'அதனால் ஏற்படும் மரண அபாயங்கள் பற்றியும், எவ்வாறு இதினின்றும் தம்மைக் காப்பாற்றிக் கொள்வதென்பதைப் பற்றியும் கமத்தொழில் திணைக்களம் வானொலி மூலமும், பிரசுரங்கள் மூலமும் அறிவுறுத்தியுள்ளது.

பின்வருமாறு இவ்வறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது. கிருமிநாசினிகள் பயிர்களுக்கு விசிறும் போது தேகத்தில் பட்டால் உடனே சவர்க்காரம் போட்டு கழுவுதல் வேண்டும். நிலத்தில் சிந்தினால் மண்ணால் போட்டு மூடி விட வேண்டும். நீண்ட நேரம் விசிறுதல் கூடாது. காற்றுக்கு எதிராக வீசுதல் கூடாது. கிருமிநாசினி தெளிப்போர் வெற்றிலை, மூக்குப் பொடி, சுருட்டு என்பன பாவிப்பதை நிறுத்த வேண்டும் தெளி கருவியை வாயை வைத்து உறிஞ்சுதல் கூடாது. கிருமிநாசினிகள் பாவித்த இரண்டு மூன்று நாட்களுக்கு செல்லக் கூடாது.

கிருமிநாசினி தெளித்த மரக்கறி வகைகளை நாலுமுதல் பதினாலு நாட்கள் வரை பறிக்கக் கூடாது கிருமிநாசினி பாவித்த மரக்கறி வகைகளை நன்றாக கழுவுதல் வேண்டும். கிருமிநாசினியிருந்த வெற்றுப் பாத்திரங்களை உடைத்தோ, நெளித்தோ அன்றி புதைத்தோ விட வேண்டும்.

தலைச்சுற்று மொய்ப்பு, பரபரப்பு, வயிற்வலி, நடுக்கம், தசைநார் சுருக்கம், கை கால் சோர்தல், மார்பு சுருக்கம், கண் செருகல் ஆகியவை ஏற்பட்டால் உடனடியாக உடைகளைக் களைந்து சுத்தமான உடைகளை அணிவிக்க வேண்டும். அரைப் போத்தல் நீரில் ஒரு மேசைக்கரண்டி உப்போ, அன்றி ஒரு மேசைக்கரண்டி குழுக்கோசோ கொடுத்து அமைதியாக, காற்றுள்ள இடத்தில் கிடக்க விட வேண்டும்.

பின்னர் தகுதியான, மருத்துவரிடம் அழைத்து செல்லுதல் வேண்டும் இது சம்பந்தமான அறிவுறுத்தல்களை விவசாய விரிவாக்கல் அலுவலர்களிடமோ, பூச்சி நாசினிகள் வியாபாரம் செய்யும்வியாபாரியையோ அணுகுதல் வேண்டும் என்றும் தெரிவிக்கப்படவுள்ளது.

# வீட்டுத்தோட்ட ஊக்குவிப்பு பணியில் இன்ரறக் கழகம்

(மண்கும்பான்)

யாழ்.பரி.யோவான் கல்லூரி இன்ரறக் கழக மாணவர்கள் மக்களிடம் வீட்டுத் தோட்ட ஊக்குவிப்பு திட்டமொன்றினை அறிமுகப்படுத்தியுள்ளனர். இத்திட்டத்தின் முதல் ஆரம்ப நடவடிக்கைகளாக பாடசாலையினை அண்டியுள்ள வீடுகளில் நாற்று விதைகளை கொடுத்து பயிர் வகைகளை உற்பத்தி செய்யுமாறு செய்வதற்கு ஏற்பாடுகளைச் செய்து வருகின்றனர்.

தாமே தமக்காகப் பயிர் செய்தல் என்ற வாக்கிற்கிணங்கவே ஒவ்வொரு வீட்டின் குடியிருப்பாளர்களும் தங்களிடம் இருக்கும் ஒரு சிறு துண்டு வெற்று நிலத்தைத் தானும் வெறுமனே விடாது பிரயோசனமான முறையில் பயன்படுத்த வேண்டும் என்று மாணவர் தெரிவித்தனர்.

இக்கால கட்டத்தில் உணவு தேவைக்கென அன்றாடம் செலவு செய்யும் பணத்தில் ஒரு பகுதியைத்தானும் மிச்சம் பிடித்துக் கொள்ளுவதற்கு வீட்டுத்தோட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட பயிர்களில் இருந்து மரக்கறி வகைகளைப் பெற்றுக்கொள்ள முடியும் என்று கூறிய யாழ். பரி. யோவான் கல்லூரி இன்ரறக்கழகத் தலைவர் இத்திட்டம் வெற்றி அளிக்கும் பட்சத்தில் இத்திட்டத்தை ஏனையபகுதிகளுக்கும் விஸ்தரிக்கப்படவிருப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

வீட்டுத் தோட்டங்களில் மேற்கொள்ளப்பட்ட பயிர் வகைகளுக்கான கிருமி நாசினிகளையும் இக்கழகம் இலவசமாக வழங்க முன் வந்திருப்பதுடன் இலவச அறிவுரைகளையும் ஆலோசனைகளையும் இக்கழகம் அவர்களுக்கு அளிக்க ஆயத்தமாக உள்ளதென்றும் மேலும் தெரிவிக்கின்றனர்.

## மாடு வளர்ப்பு:

# காப்புறுதித் திட்டம் ஒன்று நடைமுறையாகின்றது!

(வேலணை)

மாடுகள் வளர்ப்போருக்கான காப்புறுதித் திட்டமொன்றை கால்நடை உற்பத்தி சுகாதார திணைக்களம் நடைமுறைப் படுத்தியுள்ளது. மாடுகள் நோயினாலோ அன்றி அகாலமாக மரணித்தாலோ அதற்கு ஈடுசெய்ய இக்காப்புறுதித் திட்டம் அனுசரணையாக இருக்கும்.

இதுசம்பந்தமான விபரங்களை அரசாங்க கால்நடை வைத்தியர், பால்உற்பத்தியாளர் சங்க ஊழியர்கள், மாவட்ட விவசாய காப்புறுதி உத்தியோகத்தர்கள், இலங்கைவங்கி, மக்கள் வங்கி, ஹற்றன் நாஷனல் வங்கி, தேசிய சேமிப்பு வங்கி ஆகியவற்றில் பெற்றுக் கொள்ள முடியும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

## யாழ்ப்பாண மாநகராட்சி மன்றம்
## முதல் உப-வரவு செலவுத் திட்டம் - 1985

1985 ஆம் வருடத்திற்குரிய யாழ்ப்பாண மாநகராட்சி மன்றத்தில் முதலாவது உப-வரவு செலவுத் திட்டம் 1985 ஆம் ஆண்டு மார்கழி மாதம் 03 ஆம் திகதி தொடக்கம் ஏழு நாட்களுக்கு யாழ்ப்பாண மாநகராட்சி மன்ற அலுவலகத்தில் பொது மக்கள் பார்வைக்கு வைக்கப்படுமென மாநகரசபைகள் கட்டளைச் சட்டத்தின் (அத்தியாயம் 252) 214 (2) (பி) பிரிவின் பிரகாரம் இத்தால் அறிவித்தல் தரப்படுகிறது

சி. வீ. கே. சிவஞானம்,
மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

மாநகர அலுவலகம்,
யாழ்ப்பாணம். 18. 11. 1985.

## புனரமைப்புக் கூட்டம்

இற்றைக்கு இருநூறுஆண்டுகளுக்கு முன் தாபிக்கப்பட்ட புங்குடுதீவு நுழைவாயில் மடத்துவெளியம்பதி ஸ்ரீ வீரகத்திப்பிள்ளையார் ஆலய தர்மகர்த்தாசபைப் புனரமைப்புக் கூட்டம் அடுத்தமாதம் முதலாம்திகதி ஆலய முன்றலில் நடைபெற இருக்கிறது.

ஏழுவருடங்களுக்கு முன் பாலஸ்தாபனம் செய்யப்பட்டபின் இதுவரை கும்பாபிஷேகம் செய்யப்படாதிருக்கும் இவ்வாலயதர்மகர்த்தா சபையின் புனரமைப்புக்குரிய ஏற்பாடுகளை சட்டத்தரணி எஸ். கே. மகேந்திரன் சிவஸ்ரீ நா. கணேசராஜக் குருக்கள், இளைப்பாறிய பொலிஸ் சார்ஜன்ற் சோ. சிவலிங்கம் ப. கனகலிங்கம், இ. இராசமாணிக்கம் ஆகியோர் கொண்ட குழு செய்துவருகிறது.

# ஆங்கிலம் தெரிந்திருந்தால் எங்கும் சென்று வாழலாம்

(உடுவில்)

''கற்றோருக்கு சென்ற இடமெல்லாம் சிறப்பு மாணவர்கள் முதலாவதாக தாய்மொழியையும் அதற்கடுத்தபடியாக ஆங்கிலத்தையும் பயில்வது இன்றியமையாததாகும். ஆங்கிலம் ஒரு பொது மொழி அது இல்லாத நாடே கிடையாது. ஆங்கிலம் தெரிந்திருந்தால் எங்கு சென்றாலும் பயப்பட வேண்டியதில்லை. ஆகவே ஒவ்வொருமாணவனும்இப்பாடத்தை ஒதுக்கி வைக்காது தாய்மொழிக்கடுத்ததாக அங்கிலத்தை கற்பது அவசியம்''

இவ்வாறு யாழ். மாவட்டப் பாடசாலைகளுக்கு இடையே நடைபெற்ற ஆங்கிலத்தின் போட்டிகளுக்குத் தலைமை வகித்துப் பேசிய கல்வியதிகாரி திரு. வே தங்கராசா குறிப்பிட்டார்

மேற்படி போட்டிகள் யாழ். இந்து மகளிர் கல்லூரியிலும் யாழ். இந்துக் கல்லூரியிலும் இரண்டு நாட்கள் நடைபெற்றன.

சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு உரை நிகழ்த்திய முன்னாள் ஆங்கில வட்டாரக் கல்வியதிகாரி திருமதி. எஸ் ஏ. வாணன் தமதுரையில், இன்று எம்மவர் ஆங்கிலத்தைக் கற்ற காரணத்தினால் தான் வெளிநாடுகளில் வேலைவாய்ப்பை பெற்றுள்ளார்கள். எதிர்காலத்தில் எமது பிரதேசங்களில் வேலைவாய்ப்பை பெறமுடியாத நிலை ஏற்பட்டு வருகின்றது. ஆகவே சர்வதேச மொழியாகிய ஆங்கிலத்தை மணவர்களாகிய நீங்கள் திறமையாகக் கற்கவேண்டும். இதற்கு பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்களின் ஒத்துழைப்பும் அவசியம் தேவை என்றார் திரு: இ. க. குலசேகரனும் உரையாற்றினர்.

## உற்பத்திக் கண்காட்சி

சுன்னாகம் வாணி இன்ஸ்ரிரியூட் நிறுவன மாணவர்கள் மாபெரும் கண்காட்சியையும் மலிவு விற்பனையையும் நடதத வுள்ளனர் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியில் இம்மாதம் இருபத்திமூன்றாம் திகதி தொடக்கம் இருபத்தைந்தாம் திகதி வரை நடைபெறவுள்ள இக்காட்சியை யாழ். பல்கலைக் கழக உப வேந்தர் சு. வித்தியானந்தன் ஆரம்பித்து வைப்பார்.

தெங்கு பனம் பொருள் அபிவிருத்திச் சபை, சீமெந்துக் கூட்டுத்தாபனம், ஆயுள்வேதக கல்லூரி ஆகிய அமைப்புக்கள் இக்கண்காட்சியிலும் மலிவு விற்பனையிலும் பங்கு கொள்ள வுள்ளன.

# அனலைதீவு கொள்ளை எதிரொலி மக்கள் உண்ணாவிரதம்

(வேலணை)

அனலைதீவுப் பகுதியில்உள்ள இரு வீடுகளில் இடம் பெற்ற கொள்ளைச் சம்பவங்களின் எதிரொலியாக இதற்கு எதிர்ப்பு தெரிவிக்கு முகமாக அனலைதீவைச் சேர்ந்த ஆண்கள், பெண்கள் குழந்தைகள், சிறுவர்கள் உட்பட சுமார் நூற்றுக்கு மேற்பட்டோர் எதிர்ப்புச் சுலோகங்களை ஏந்திய வண்ணம் வெய்யிலையும் பொருட்படுத்தாது கடந்த திங்கட்கிழமை ஊர்காவற்றுறை மக்கள் வங்கிக்கு முன்பாக சாத்வீகமான முறையில் உண்ணாவிரதமொன்றை நடாத்தினர்- காலை பத்து மணியிலிருந்து பிற்பகல் வரை உண்ணா விரதம நடைபெற்றது. பின்னர் அவர்கள் அமைதியாகக் கலைந்து சென்றனர்.

உண்ணா விரதத்தை முடித்துக் கொண்டு அனலைதீவுக்கு திரும்பிச் சென்ற போது காரைநகர் கடற்படையினர் இவர்கள் சென்ற படகை தடுத்து நிறுத்தினர். பின்னர் இவர்களை விசாரணை செய்த பின்னர் மீண்டும் அனலைதீவு செல்ல அனுமதித்தனர்

ஆயிரக்கணககான ரூபா பெறுமதியான நகைகளும், பணமும் ஏனைய பொருட்களும் மேற்படி வீடுகளிலும் கொள்ளையிடப்பட்டதாக தெரிய வருகிறது. அண்மைக் காலங்களில் புங்குடுதீவுப் பகுதிகளிலும் பல வீடுகளிலும் கொள்ளைச் சம்பவங்கள் இடம் பெற்றுள்ளதும் குறிப்பி த்தக்கது

## நால்வர் சித்தி

(சங்கானை)

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியில் ஐந்தாம் வகுப்பு புலமைப் பரிசில் பரீட்சையில் நான்கு மாணவர்கள் பல வருடங்களுக்கு பின்னர் இம்முறை சித்தியடைந்துள்ளனர். செல்வி. ப. சாந்தினி, செல்வன் வி. தயாதரன், செல்வன் ம திவாகரன், செல்வன் இராஜஸ்கண்ணன் ஆகியோரே சித்தியடைந்தனர்.

# வடஇலங்கை சுதேச வைத்திய சபையின் இறுதிவருட பரீட்சை முடிவு

வட இலங்கை சுதேச வைத்தியசபையினால் நியமிக்கப்பட்ட பரீட்சைக் குழு 1985 செப்டம்பர் மாதர் டி ஏ.எம். இறுதி வருடப் பரீட்சையை நடத்தி தனது முடிவுகளை சபையிடம் ஒப்படைத்தது. பின்வருவோர் சித்தி அடைந்துள்ளனர் என சபை உறுதி செய்த பின்னர் லங்கா ஆயுர்வேத வைத்தியக் கல்லூரிப் பதிவாளர் இந்த முடிவுகளை வெளியிட்டுள்ளார்.

சித்தியடைந்தோர் விபரம்: முதலாம் பிரிவு:- திருமதி. தேவகுஞ்சராம்பாள் மனோகரன், செல்வி. சிவசக்தி பேரம்பலம், செல்வி. விஜயராஜினி விஜயரட்ணம்.

இரண்டாம்பிரிவு: செல்வி. ஜெயந்தி யோகராஜா, செல்வி. வதனா வீரசிங்கம், செல்வி. கௌரிதேவி காங்கேசன், செல்வி. கிருஷ்ணவதனி கேதீஸ்வரதாஸன், செல்வி. ஜானகி சோமசுந்தரம், செல்வி. பிரேமலதா சிவநாதபிள்ளை, செல்வி. சாந்தி கஜேந்திரா, திரு. பகவான் நித்தியானந்தம், செல்வி. சிற்றாஜினி துரைராஜசிங்கம்.

சாதாரண சித்தி:- திரு. M. A. C கலீலுல் ரஹ்மான், செல்வி. தவமணி சுப்பிரமணியம், செல்வி. விமலாஒலின்டீனா பெர்னாந்து, செல்வி. தனலக்ஷ்மி மயில்வாகனம். செல்வி. புஷ்பவதி நடராஜா, செல்வி. ரேணுகாதேவி சபாபதி, திரு. மார்க்கண்டு ஸ்ரீஸ்கந்தராஜா செல்வி. மேரி கொன்செப்டா சந்தியாம்பிள்ளை, செல்வி. பஞ்சரட்ணதேவி முத்தையா, செல்வி. வாசுகி கனகசபாபதி, திரு. குருசாமி செட்டியார் கணேசராசா, செல்வி. அருள்லீலி சூரியகுமாரி அருட்பிரகாசம், திரு. வைத்திலிங்கம் வரதலிங்கம், திரு. வேலும்மயிலும் சிவகுமாரன், திரு. விசாகப் பெருமாள் பாலகுமார், செல்வி கோணேஸ்வரி விஷ்வலிங்கம், செல்வி. பவளராணி மதியாபரணம்.

முன்பு நூனசித்தி அடைந்து இம்முறை பரீட்சையில் தேறுபவர்கள்: திரு. சின்னத்தம்பி சச்சிதானந்தம், திரு. தர்மலிங்கம் சந்திரசேகர், திரு. வைத்திலிங்கம் சிவாஜி, திரு. சிதம்பரப்பிள்ளை செந்தில்நேசன், செல்வி. இலங்கைநாயகி ராமசாமி, திருமதி தவலக்ஷ்மி கணேசநாதன், செல்வி. ஜெஸிந்தா செபஸ்தியாம்பிள்ளை, திருமதி. புஷ்பராணி பூபாலசிங்கம், செல்வி ஸ்ரீதேவி கணபதிப்பிள்ளை, திருமதி. இந்திராணி சிவாஜி, செல்வி. விஜயலக்ஷ்மி கணபதிப்பிள்ளை, திருமதி. மனோரஞ்சிதம் ராஜேந்திரகுமார்.

## கிராம அபிவிருத்திச்சங்கத்தின் கோரிக்கை

# மல்லாகத்திற்குத் தனியான ப.நோ.கூ. சங்கம் அவசியம்

(யாழ்ப்பாணம்)

அண்மைக்காலங்களில் அளவெட்டி- மல்லாகம் பலநோக்குக் கூட்டுறவுச்சங்கம் இலாபம் பெற்றுக் கொடுக்கும் இரு கிளைகள் மல்லாகத்தில் இருந்தும், மல்லாகம் புறக்கணிக்கப்படுவதாக மக்கள் மனதில் ஒரு அபிப்பிராயம் எழுந்துள்ளதால் மல்லாகத்திற்கென ஒருதனியான பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் அமைத்துத்தர வேண்டுமென்று உதவி கூட்டுறவு ஆணையாளரைக் கோருவதென்ற தீர்மானம் ஒன்று மல்லாகம் கிராம அபிவிருத்திச்சங்கத்தின் மாதாந்தக் கூட்டத்தில் ஏகமனதாகநிறைவேற்றப்பட்டது

கூட்டத்திற்குச் சங்கத்தலைவர் திரு சு ஸ்ரீபாஸ்கரன் தலைமை வகித்தார்.

இதுஇவ்வாறிருக்க மல்லாகத்தில்உடனடியாக மொத்தவிற்பனை நிலையமொன்றையும்கிராமியவங்கியையும் ஆரம்பிக்கும் பட்சத்தில் ஒத்துழைப்பை நல்குவதை மீள ஆராயலாமெனவும் தீர்மானிக்கப்பட்டது. இதுவிடயத்தில் வேண்டிய நடவடிக்கை எடுப்பதற்கு சங்கத் தலைவர் திரு. சு. ஸ்ரீபாஸ்கரனுக்கு அதிகாரம் வழங்கப்பட்டது.

### உதய சிந்தனை

நீ செய்வதென்ன என்பதே முக்கியம் பிறர் என்ன நினைக்கிறார்கள் என்பதல்ல.
—பெர்னாட்ஷா

37, கண்டி வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 23336

## இதய ஒலி

22-11-85 வெள்ளிக்கிழமை (குரோதன - கார்த்திகை 7)

# நியாயப்படுத்த முடியாத தமிழீழ படுகொலைகள்

**1983** ஜூலையில் ஆரம்பமான தமிழர் படுகொலை வரலாற்றில், யுத்த நிறுத்தம் அமுலில் வந்த பின்னரே கூடுதலான தமிழர்கள் கொல்லப்பட்டுள்ளதாக கிடைத்துவரும் புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன.

அரசாங்கம் யுத்தநிறுத்தத்தை நேர்மையாகக் கடைப்பிடித்து வருகின்றது என்று கூறிக்கொண்டு, ஆயுதப்படைகள் மூலம் நடத்திவரும் அட்டகாசத்தினால் உயிரிழந்தவர்கள் பற்றிய சரியான கணக்கெடுப்பு ஒருபோதும் எடுக்கமுடியாது என்பது அனைவருக்கும் தெரியும்.

ஆனாலும், பல்வேறு அமைப்புகளும், பிரஜைகள் குழுக்களும் சேகரித்துவரும் விபரங்கள் உண்மையான பல விபரங்களை அம்பலத்துக்குக் கொண்டு வருகின்றது.

எனினும் அரசாங்கம் இந்தக் கொலைகளை ஒரு போதும் ஏற்றுக்கொள்வதில்லை.

கொல்லப்பட்டவர்கள் அனைவருக்குமே பயங்கரவாதிகள் என்று பட்டம் சூட்டி, பத்திரிகைகளுக்கும் அறிக்கை விடுவதுடன், கதை முடிந்துவிடுகின்றது.

அப்பாவித் தமிழர்களின் கொலைகளை ஊதுகுழல் பிரசாரத்தின் மூலம் நியாயப்படுத்த அரசு எடுத்துவரும் நடவடிக்கைகள் பல சந்தர்ப்பங்களில் உண்மையை மறைத்து, பொய்யையே உண்மையாக நம்பவைத்துள்ளது என்பதையும் நாம் ஒப்புக்கொண்டேயாகவேண்டும்.

கோடிக் கணக்கான ரூபாய்களை திட்டமிட்ட பொய்ப்பிரசாரத்துக்கு அரசு செலவிடுவதும், அதன் பிரசார இயந்திரம் ராட்சத வேகத்தில் இயங்குவதுமே இதற்குக் காரணமாகும்.

தமிழர் படுகொலைச் சம்பவங்களை உடனுக்குடன் அம்பலத்துக்குக் கொண்டு வந்து, உண்மையை உலகுக்கு எடுத்துக் கூற சரியான ஒரு அமைப்பு, தமிழ் மக்களிடையே உருவாக்கப்படாத வரை இந்த நிலை தொடர்ந்து கொண்டேயிருக்கும்.

திருமலை, வவுனியா, மூதூர், மட்டுநகர், கிளிநொச்சி, மன்னார், முல்லைத்தீவு, ஆகிய தமிழ் பிரதேசங்களில் கடந்த நான்கு மாதங்களுக்குள், அதாவது யுத்தநிறுத்தம் அமுலுக்கு வந்த பின்னர் இடம்பெற்ற அப்பாவித் தமிழர் படுகொலைகள், தமிழரிடையே இறுக்கமான ஒரு கூட்டான அமைப்பு இல்லாமையினாலேயே கறுப்புத்திரைக்குள் மறைக்கப்பட்டுள்ளன.

ஆனால் கடந்த வாரம் மட்டுநகரில் எட்டுத் தமிழர்கள் ஆயுதப்படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவம், அங்குள்ள பிரஜைகள் குழுவினர் எடுத்த துணிகரமான முயற்சியினால் அம்பலப்படுத்தப்பட்டதுடன் மட்டுமன்றி, சம்பந்தப்பட்டவர்களை ஒப்புக் கொள்ளவும் வைத்துள்ளது.

கண்ணிவெடி விபத்தில் நான்கு பொலிஸார் மரணமானதற்காக, எட்டு அப்பாவிகள் சுட்டுக் கொல்லப்பட்டதை என்ன காரணம் கூறியும் நியாயப்படுத்தலாமா?

கண்காணிப்புக்குழு முன்னால் கண்கண்ட சாட்சிகள் நேரில் சென்று சாட்சியமளித்த பின்னர், ஆயுதப்படையினரால் தப்புவது சிரமமாகிவிட்டது!

அதனால் தாம் நடத்திய துப்பாக்கிப் பிரயோகத்தில் எட்டுப்பேர் மரணமானதை அவர்கள் கண்காணிப்புக் குழுவுக்கு அளித்த வாக்குமூலத்தில் ஒப்புக்கொண்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

நேரில் கண்டவர்கள், தமக்கு என்ன நடந்தாலும் பரவாயில்லை என்று துணிச்சலாக சாட்சியமளிக்க முன்வந்ததால் எட்டுத் தமிழர் மரணங்களை ஆயுதப்படையினரால் நியாயப்படுத்த முடியாது போய்விட்டது.

அவர்களைப் பயங்கரவாதிகள் என்று பிரசாரம் செய்ய முடியாமலும் போய்விட்டது.

இவ்வாறு ஒவ்வொரு சம்பவங்களையும் யுத்த நிறுத்தக் கண்காணிப்புக்குழு உடனுக்குடன், தனித்தனியாக விசாரணை செய்யுமானால் பொதுமக்கள் உண்மைகளைக் கூறத்தயங்க மாட்டார்கள்.

திருமலை இந்து மயானத்தில் சடலமொன்றை எரிக்கச் சென்ற ஒருவர் கொல்லப்பட்ட சம்பவம் சில தினங்களுக்கு முன் நடைபெற்றது.

கிளிநொச்சியில் தேடுதல் நடத்திய ராணுவத்தின் துப்பாக்கிக்கு ஏழு பிள்ளைகளின் தாயான விதவை ஆசிரியையும், ஒரு இளைஞனும் சில நாட்களுக்குமுன் பலியானவர்கள்.

இவைகள் பற்றியெல்லாம் குழு விசாரித்து உண்மையை அறிய வேண்டும்

ஆயுதப்படையினரின் முகமூடியைக் கிழிக்க, பொதுமக்கள் முன்வரவேண்டும்.

எதிர்காலக் கொலைகளையாவது தடுத்து நிறுத்த இது உதவலாம்.

★ நேற்றைய தொடர்ச்சி

# இலங்கை ராணுவப்படை இன்று பிரமாண்டமாக வளர்ச்சியடைந்துள்ளது

தமிழர் விடுதலைப் புரட்சியாளர்கள் திருகோணமலைப் பிராந்தியத்தில் தமது வலிமையை மேலோங்கச் செய்யும் பொருட்டு, யாழ்ப்பாணத்திலிருந்து ஆள், ஆயுதம் வெடிமருந்து ஆகியவற்றைத் துரித கதிப் படகுகளில் அங்கு கொண்டு வருகின்றனர். இச்சந்ததிக்குரிய ஒரு திருப்பமாக, அரசாங்கமும் புதிது புதிதாக துருப்புக்களையும், உபகரணங்களையும் சேர்த்துவருவதுதான் புரட்சியாளர்களுக்குத் தலையிடியைக் கொடுத்து வருகிறது அவர்கள் இது குறித்து அரசுக்கு எதிராகப் பின்வருமாறு குற்றம் சுமத்துகின்றனர். இலங்கை அரசாங்கமானது போர் இடை நிறுத்தத்தைத் தகாதபடி பூரணமாகப் பயன்படுத்தி, பாரிய அளவில் மீண்டும் படைபலம் பெருக்கும் முயற்சியொன்றில் இறங்கியுள்ளது.

அதே சமயம் தமிழ் நாட்டில் அவர்களது இத்தகைய எத்தனங்களுக்கு இந்தியா ஒரேயடியாக முற்றுப்புள்ளி வைத்து விட்டது.

தமிழர் விடுதலைப் புரட்சியாளர்கள் கொண்டுவரும் இக்குற்றச்சாட்டு முற்றிலும் ஆதாரமற்றது அல்ல. இரண்டு வருடங்களுக்கு முன்பு, இலங்கைத் தீவின் அரசு தனது ஆயுதப் படைகளைப் பெருக்கி, நவீனமயமாக்கும் நடவடிக்கைகளைத் தொடக்கி வைத்தது. இன்று இவை ஒரு ஆவேச கட்டத்தை எய்தியுள்ளன. 1983 இல் ஒரு சாமானிய பத்தாயிரமாக இருந்த படை பலம், இப்போது பதினாறாயிரமாக வளர்ந்து விட்டது வேறு விதமாகச் சொல்வதாயின், இங்கு நூற்றுக்கு அறுபது சத விகித அதிகரிப்பொன்றை அவதானிக்கலாம்.

அதைவிட முக்கியமானது யாதெனில், சுடுபடைக்கலஆற்றலில் இலங்கை அரசு பிரமாண்டமான விதத்தில் ஏற்றம் அடைந்துள்ளமையாகும். இலங்கையின் வைபவ அலங்கார இராணுவம், 1983 வரை அணிவகுப்பு மைதான நடவடிக்கைகளுடனேயே நின்றுவிட்டிருந்தது. தற்போது என்றுலோ, பெல் ரக போர் ஹெலிக்கப்டர்கள் அதனிடம் உள்ளன என அது பெருமிதம் கொள்கிறது. சிங்கப்பூரிலுள்ள சர்வதேசப் படைக்கல வணிகர்களிடமிருந்து இவை கொள்வனவு செய்யப்பட்டன. இவை தவிர, அதனிடம் கவச வாகனங்கள், நவீன காலாட்படை அணியடுக்குகள் என்பனவும் உள்ளன.

தமிழர் விடுதலை இயக்கங்களின் கெரில்லாக்கள் இராணுவ சுற்றுக் காவற் படைகளை நிலக் கண்ணி வெடிகளுள் அகப்படுத்தி அழிப்பதில் நிபுணர்கள். இத்தொல்லை தாங்காது, இலங்கை இராணுவமானது நிலக் கண்ணி வெடியெதிர்ப்பு வாகனங்களையும் பெற்று வருகிறது. அவற்றின் எண்ணிக்கையோ மூலமோ வெளிப்படையாகக் குறித்துரைக்கப் படவில்லை. ஆயினுமிவை தென்னாபிரிக்காவில் உற்பத்தியாவன என நம்பப்படுகிறது. கிளர்ச்சி எதிர்ப்புச் சமரில் இவற்றின் உபயோகம் பயன்தரவல்லது என்பது நிரூபணமாகியுள்ளது.

இலங்கைக் கடற்படையும் அதற்கு வாய்ந்த பணிகளை நிறைவேற்றுவதிற் கையாலாகாத் தன்மை காட்டிவந்தது. 'பாக்கு' நீரிணையிலும் கடலோரங்களிலும் தமிழர் விடுதலைக் கெரில்லாக்களின் படகு போக்குவரத்தை இடைநின்று தடுக்கக் கடற்படையால் முடியவில்லை. தற்போதெல்லாம் புதிய, முன்னரிலும் பார்க்க வேகமான பீரங்கிப் படகுகளை அது விரைவாக ஈட்டி வருகிறது.

அண்மைக் காலம்வரை இலங்கை விமானப்படையின் நிலைமையும் இதே மாதிரியாகத் தான் இருந்தது. முன்னர் ஒரு சில போக்குவரத்து விமானங்களை மாத்திரம் அது கொண்டதாக இயங்கிற்று. இன்று குறைந்த பட்சம் எட்டு 'சியா மார்ஷெட்டி' வான்கலன்கள் அதனிடம் உள்ளன.

இத்தாலிய 'ஜெற்'கள் போர்ப் பயிற்சிக்கும் குறிப்பாக கிளர்ச்சி எதிர்ப்புப் போராட்டத்திலும் பயன்படுதலில் பெயர் பெற்றவை. கொழும்பிலுள்ள அரசாங்க அதிகாரிகள், இவை விமானப் படைவசம் உள்ளமையை ஒப்புக்கொள்ளக் கூச்சப்படுகின்றனர். ஆனால் உண்மை என்ன தெரியுமா? எதனைத்தான் 'அமசடக்கமாக' மூடி மறைத்து வைத்திருந்தாலும், வானைப் பிளக்கும் 'சியா மார்ஷெட்டி' யின்பேரிரைச்சல்ஒலியைஒளித்துவைப்பது, அதுவும் அமைதியான இலங்கை ஆகாயத்தில், அவ்வளவு எளிதான காரியமல்ல, இரண்டொரு வாரங்களுக்கு முன்பு, இரண்டாவது இலங்கை—இந்தியா 'ரெஸ்ட்' மட்டைப்பந்தாட்ட ('கிறிக்கெட்') போட்டி கொழும்பில் நடைபெற்றதல்லவா? சரவணமுத்து ஸ்ரேடியத்தில் போட்டி நடந்தேறுகையில் இந்த போர் 'ஜேற்'களில் இரண்டு அதற்கு மேலாக வான்காட்சியொன்றில் ஈடுபட்டு, தமது 'கைவரிசைகளை' அங்கு குழுமியிருந்தோருக்குச் சற்றுக் காண்பித்ததாகவும் அறியப்படுகிறது.

**பகுதி நான்கு**
**(இந்தியா ருடே கட்டுரையின் மொழிபெயர்ப்பு)**

இவை ஒருபுறமிருக்க, வவுனியாவிலும் மட்டக்களப்பிலும் பந்தோபஸ்து அல்லது பாதுகாப்பு வலய விசாலிப்பு எனும் பெயரில் அரசாங்கம் பெருவாரியான நிலங்களைச் சுவீகரித்துவருகிறது. இரண்டாவது உலக மகா யுத்தத்தின் போது இயங்கிய விமானத் தளங்களைச் சூழ வவுனியா, மட்டக்களப்பு ஆகிய இடங்களில் நூற்றுக் கணக்கான நிலங்கள் இங்ஙனம் இலங்கை அரசின் வசமாக்கப்பட்டுள்ளன.

இலங்கைப் பந்தோபஸ்து அமைச்சர் அத்துலத்முதலி இராணுவ ஆயத்த முன்னேற்றம்பற்றிக் குறிப்பிடுகையில் 'ஆம், இராணுவம் பிரமாண்ட வளர்ச்சி அடைந்துள்ளமை உண்மைதான்.' என ஒப்புக் கொள்கிறார். 'வைபவக் காட்சிப் படையாக இலங்கை இராணுவம் இடம்வகித்த காலத்தை அதுவெகுவாகத்தாண்டி விட்டது. இன்று அதனிடம் சுடுபடைகலச் சக்தியும் செயல் உந்துவேகமும் உள்ளன.' என்கிறார் அவர்.

கொழும்பில் அரச அதிகாரிகள் எவரும், பாரிய பாதுகாப்பு முஸ்தீபுகள் இலங்கையில் நடந்தேறிவருவதை ஏற்றுக் கொள்ளத் தயங்குவதில்லை. அங்கு விநியோகமாகும் நாளாந்தப் பத்திரிகைகளில், கிரமமாகக் கொட்டை எழுத்துக்களில் வெளிவரும் பாதுகாப்புப் படைகளுக்கான ஆட்சேர்ப்பு விளம்பரங்கள் இம் முயற்சிகளுக்குச் சான்று பகரும். தங்குதடையின்றி இவற்றை ஒத்துக் கொள்ளும் இலங்கை அதிகாரிகள், பளிச்சிடும் தமது புதிய யுத்த உபகரணங்களினதும் படையாட் பயிற்சியினதும் தோற்றுவாய் பற்றி உரையாடத் தயங்கி நிற்கின்றனர். தமிழர் விடுதலைப் புரட்சியாயர்களின் கூற்றுப்படிக்கு, இஸ்ரேலியர் தான் பயிற்சியின் பெரும்பாகத்தைப் பொறுப்பேற்றுள்ளதாகத் தெரிகிறது. பெரும் தொகையான சிப்பாய்கள் பயிற்சியின் பொருட்டுப் பாகிஸ்தான் செல்கின்றனர் எனவும் அறிக்கைகள் கூறுகின்றன. இவையல்லாமலும், நியாயமான அனுபவசாலிகள் சம்பளத்திற்காக அமர்த்தப்பட்டு இலங்கைக் 'கொமாண்டோ' படையினரைப் பயிற்றி வருகின்றனர் என்பதும் நன்கு அறியப்பட்டதே.

உத்தியோகபூர்வமாக ' ஒரு சில இஸ்ரேலியர்கள் இலங்கையில் உள்ளனர் என்பதை அரசாங்கம் ஒப்புக் கொள்கிறது. பொலிஸ் வேவுத் தகவற் பயற்சியளிக்க இலங்கை வந்துள்ள இஸ்ரேலியர்கள் நல்ல பணி ஆற்றியுள்ளனர். ஆனால், மொசாட் படையினர் எவரையும் நாம் இங்கு வைத்திருக்கவில்லை'' என்கிறார் அமைச்சர் அத்துலத்முதலி. ஆனால், தமிழர்களின் நோக்குக் கோணத்தில், 'மொஸாட்' டிற்கும் 'ஷின்பெத்' திற்குமிடையே எதுவித உண்மையான வேறுபாடும் காண்பதற்கில்லை, பாலஸ்தீனியரிடமிருந்து தமது பயிற்சியைப் பெற்றுள்ள அனேக தமிழ் விடுதலை கெரில்லாக்கள் இந்த இரண்டு இஸ்ரேலிய படைகளுக்குமே அஞ்சுவர்.

இலங்கை அரசாங்கத்தின் புதிய வேவுபார்த்தல் ஒழுங்கமைப்பு ஒன்றினைப் பரந்த அளவில் உருவாக்குவதற்குரிய அத்திபாரத்தை இஸ்ரேலியர்கள் இட்டுள்ளனர். ஆதேவேளை சத்தம் சந்தடியின்றி, சம்பளத்திற்கு இலங்கை அரசினால் அமர்த்தப்பெற்ற பிரிட்டிஷாரும் இவ்வகையில்தமதுபங்கை நன்கு நிறைவேற்யுள்ளனர்.

'கீனி மீனி சேர்விஸெஸ்' (கே. எம். எஸ்.') எனும்

—5-ஆம் பக்கம் பார்க்க

## ★ வரலாற்றுக் கீர்த்திமிக்க ஜெனீவா உச்சிமாநாடு நிறைவு:

# இருதரப்பு உறவு, மனித உரிமை, பிராந்திய பூசல் பற்றியும் ஆலோசனை!

(ஜெனீவா)

சோவியத் தலைவர் திரு. கொர்பசெவ்வும், அமெரிக்க ஜனாதிபதி திரு. றெனல்ட் றீகனும் ஜெனீவாவில் நடத்திய வரலாற்றுச் சிறப்புக் கொண்ட உச்சிமாநாடு நிறைவு பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப் படுகிறது. ஆயுதக்கட்டுப்பாடு, இருதரப்பு உறவுகள், மனித உரிமைகள், பிராந்தியப் பூசல்கள் என்பன பற்றி இருதலைவர்களும் விவாதித்த தாக ஜெனீவா அறிக்கைகள் தெரிவித்தன.

மேற்படி பேச்சுவார்த்தைகள் தொடர்பாக அதிகார பூர்வ அறிக்கைகள் எதுவும் உடனடியாக வெளியிடப்பட வில்லை என்று நேற்றுக்காலை வெளியான செய்தி தெரிவித் தது.

கூட்டு நிகழ்ச்சி ஒன்றில் இரு தலைவர்களும் பங்குபற்றினர் என்று மட்டும் அறிவிக்கப் பட்டது.

உச்சிமாநாட்டுப் பேச்சு வார்த்தைகள் சம்பந்தமாக இருதரப்பு அதிகாரிகளும் விரிவான அறிக்கை தயாரித்துக் கொண்டிருப்பதாகவும் கூறப் பட்டது.

இருதலைவர்களும் தனிப் பட்டமுறையில் இரு தடவைகள் நீண்ட நேரமாகப் பேசினர் என்றும் தகவல் வெளியாகியுள்ளது.

இரு தலைவர்களும் வரவேற்பு நிகழ்ச்சியிலும், இரவு விருந்துபசாரத்திலும் கலந்து கொண்டனர் என்றும் அறிவிக்கப்பட்டது.

இதேவேளை, திருமதி கொர்பசெவ்வும், திருமதி நான்ஸி றீகனும் தொடர்ந்து உரையாடினர் என்றும் புதிய செஞ்சிலுவைச்சங்க மியூஸியத்திற்கு இருவரும் சென்ற போது மனிதகுல நம்பிக்கை செழிப்புற வேண்டும் என்று கூட்டுச் செய்தி ஒன்றை வெளியிட்டதாகவும் மேலும் ஜெனீவா அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

### 26 ஆயிரம் தொலைபேசிகள் சீர்கேடு

(சென்னை)

சென்னை நகரில் சமீபத்திய பெருமழையால் இருபத்தாறுயிரம் தொலைபேசிகள் சீர்கெட்டுள்ளதாகவும் இவற்றைச்சீர்ப்படுத்துவதில் பொறியியலாளர்களும், மற்றும் ஊழியர்களும் முழுமுனைப்புடன் ஈடுபட்டுள்ளதாகவும் நேற்றுத் தெரிவிக்கப்பட்டது.

### பிரதமர் மொஹமத் ஆவல்

## மலேசிய-சீன உறவுகள் மேம்பட வேண்டியது அவசியம்

(பீக்கிங்)

"மலேஷிய - சீன உறவுகள் எல்லாவகையிலும் மேம்பட வேண்டும்" என்று மலேஷியப் பிரதமமந்திரி மொஹமத் கூறியுள்ளார்.

சீனவில் உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டுள்ள அவர் பீக்கிங்கில் அரசவிருந்தில் பேசுகையில் இவ்வாறு கூறினர்.

"சில பிரச்சினைகளைத் தீர்க்க முடியாதிருப்பதுதான் சீன-மலேஷிய உறவுகளின் வளர்ச்சிக்குத் தடையாக இருக்கிறது எனவும் அவர் சென்னர்.

### 'கல்லுக்குள் ஈரம்'

## தென்னபிரிக்க அரச அதிபர் கமிட்டியின் வற்புறுத்தல்

(ஜொஹனஸ்பேக்)

வெள்ளையரல்லாத வியாபாபாரிகளுக்கு எதிராகப் பாரபட்சம் காட்டும் சட்டங்களை நீக்க வேண்டுமென தென்னபிரிக்க அதிபர் சபையின் கமிட்டி ஒன்று வற்புறுத்தியுள்ளது.

இக் கமிட்டி ஓர் அரசு ஆலோசனைக் குழுவாகும்.

தென்னபிரிக்காவிலுள்ள எல்லா வியாபாரிகளும் நிறத்தின் அடிப்படையில் கட்டுப்பாடின்றி இயங்க வகைசெய்யப்பட வேண்டும் என்று அக் கமிட்டி கூறியுள்ளது.

தென்னபிரிக்காவின் அதிக வியாபார நிறுவனங்கள் வெள்ளையர் வாழும்பகுதிகளிலேயே இருக்கின்றன,

அதிபர் பி. டபிள்யு. பொத்தாவுக்கு ஆலோசனை கூறும் இக்கமிட்டியில் ஆளும் வெள்ளையர் தேசிய கட்சி ஆதிக்கம் செலுத்துகிறது.

பாரபட்சங்களைப் போக்குவதற்கான திருத்தங்கள் பற்றி உடனடியாகப் பரிசீலிக்க வேண்டும் என்றும் இக்கமிட்டி கேட்டுக்கொண்டுள்ளது.

### கூட்டுறவு துறையில் ஆதி திராவிடர்

(சென்னை)

இவ்வருடத்தில் மேலும் பத்தாயிரம் ஆதித் திராவிடருக்குக் கூட்டுறவுத்துறை வாய்ப்பளிக்கப்படவுள்ளது,

இதுவரை தொண்ணூறுயிரம் ஆதித் திராவிடர் இத்துறையில் சங்கங்கள் மூலம் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

## பாப்புவா - நியூகினியின் பிரதமமந்திரி நம்பிக்கையின்மையால் பதவியிழப்பு

(லண்டன்)

பாப்புவா-நியூகினியின் பிரதமமந்திரி திரு.மைக்கெல் சொமாரே பாராளுமன்றத்தில்நம்பிக்கையில் லாத்தீர்மானம் மூலம் பதவியிலிருந்து அகற்றப்பட்டுள்ளதாக நேற்று அறிவிக்கப்பட்டது. திரு. சொமாரே தென்பசுபிக் நாடான பாப்புவா-நியூகினியின் அரசியல் தலைவராக எட்டுவருடங்கள் பணியாற்றினர்.

பத்து வருடங்களுக்கு முன் இந்நாடு அவுஸ்திரேலியாவிடமிருந்து சுதந்திரம் பெற்றது.

எதிர்கட்சித் தலைவரான திரு. பயால் பிங்டி புதிய பிரதம மந்திரியாகியுள்ளார்.

அவர் இவ் வருடத் துவக்கத்தில் ஆளும்கூட்டணியிலிருந்து கட்சி மாறியவர் என்பது குறிப்பிடத்தக்கது.

### ராஜீவ் வற்புறுத்து

(புதுடில்லி)

"வளரும் நாடுகளிடையே மேலும் ஒத்துழைப்புத் தேவை" என்று பிரதமமந்திரி திரு. ராஜீவ்காந்தி புதுடில்லியில் நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் பேசுகையில் வற்புறுத்தினர்.

### சீக்கிய விதவைகளுக்கு

## மாதாந்த ஓய்வூதியம் வழங்க பஞ்சாப் அரசு தீர்மானம்

(பஞ்சாப்)

திருமதி. இந்திரா காந்தி கொலை செய்யப்பட்ட கால கட்டத்தில் கணவர்மரை இழந்த விதவைகளுக்கு பஞ்சாப் அரசு மாதாந்தம் இருநூற்றைம்பது ரூபா ஒய்வூதியம் வழங்கவுள்ளது.

இத்தகவலை மாநில முதலமைச்சர் திரு. பர்னலா வெளியிட்டுள்ளார்.

கடந்த வருடம் நவம்பரில் நிகழ்ந்த கலவரங்களின்போது பிரஸ்தாப சீக்கியக் கணவர்மார் கொல்லப்பட்டனர்.

### முதல்வர் எம்.ஜி.ஆர். இரங்கல் செய்தி

## அமரர் பட்வாரி தமிழ்நாடு நலனில் அக்கறை கொண்டவர்

[சென்னை]

"அமரர் பிரபுதாஸ்பட்வாரி தமிழ் நாட்டின் நலனில் அதிக அக்றைகொண்டவர், தலை சிறந்த விடுதலை வீரர் ஒருவரை நாடுஇழந்து விட்டது" என்று தமிழ் நாடு முதலமைச்சர் திரு எம் ஜி. இராமச்சந்திரன் முன்நாள் தமிழ்நாடு கவர்னர் பிரபுதாஸ் பட்வாரியின் மறைவையொட்டி விடுத்துள்ள இரங்கல் செய்தியில் கூறியுள்ளார்.

ஜனதிபதி திரு. ஜெயில்சிங் அனுதாபச் செய்தி ஒன்றினை வெளியிட்டுள்ளார்.

முன்னுள் பிரதமமந்திரி திரு. மொரார்ஜி தேசாய் தனது இரங்கல் செய்தியில் 'பட்வாரி தலைசிறந்த காந்தியவாதி' எனக் குறிப்பிட்டுள்ளார்.

### மீனவருடன் கோவேந்தன் பேச்சுவார்த்தை

(சென்னை)

சென்னை மெரின கடற்கரையை எழிலூட்டும் தமிழக அரசின் நடவடிக்கையால் பாதிப்புற்றதாகக் கூறப்படும் மீனவர்களின்பிரதிநிதிகளுடன் பிற்பட்டோர் நல வாழ்வுத் துறை அமைச்சர் திரு. எம். ஆர். கோவேந்தன் பேச்சுவார்த்தை நடத்தினர்.

இப்பேச்சுவார்த்தைகள் நேற்றும் தொடர்ந்து நடைபெற்றன.

### நோர்வே கப்பல் மீது தாக்குதல்

தனது எண்ணெய்க் கப்பல் ஒன்று தாக்குதலுக்குள்ளானதாகவும் ஆயினும் பெரும் பாதிப்பேதும் இல்லை என்றும் நோர்வே அறிவித்துள்ளது.

### இலங்கை....

...4ம் பக்கத் தொடர்

'சனெல் ஐலன்ட்ஸ்' தீவுகளின் கம்பனி ஒன்றுடன் இலங்கை அரசு ஒரு வருடத்திற்கு மேற்பட்ட காலத்திற்கு முன்னர், ஓர் உடன்படிக்கை செய்து கொண்டது. இலங்கைத் தீவில் பாதுகாப்புப் பயிற்சி, மீள ஒழுங்க அமைப்பு ஆகியவற்றை மேற்கொள்வதற்காகவே இவ்வொப்பந்தம் கைச்சாத்து ஆகியது. பிரிட்டனின் 'எஸ். ஏ. எஸ்.' விமானப் படையின் முன்னைநாள் ஊழியர்களும் முதிர்ந்த அனுபவசாலிகளுமானவர்களே அக் கம்பனியில் உள்ளனர். 'கே. எம். எஸ.' தெரிவு செய்யப் பெற்றமை ஒருவித வியப்புக் கலந்த ஆவலை கொழும்பிலுள்ள பல இராஜதந்திரிகள் மத்தியில் எழச் செய்துள்ளது. பிரிட்டிஷ் அரசுடன் இக்கம்பனி ஓரளவு நெருங்கிய தொடர்பு பேணிவருகின்றமையைச் சுட்டிக்காட்டும் அவர்கள், பெய்ரூட்டிலுள்ள பிரித்தானிய இராஜதந்திர ஆளணியினருக்குப் பந்தோபஸ்துக் காவலின் பொருட்டு இக்கம்பனின் ஆட்களை பிரிட்டிஷார் சம்பளம்பேசி அமர்த்தியிருந்தனர். (திங்கள் தொடரும்)

### ஸிம்பாப்வே பிரதம மந்திரி

## மனித உரிமையை விட பணஆதயமே பிரிட்டனின் குறிக்கோள் என சாடல்

(லண்டன்)

தென்னபிரிகா மீதான தடைகள் விடயத்தில் அர்த்தமுள்ள அணுகு முறையைக் கடைப்பிடிக்குமாறு பிரிட்டனை வற்புறுத்த வேண்டும் என்று ஸிம்பாப்வே பிரதம மந்திரி திரு.றெபேட் முகாபே ஆபிரிக்க ஒற்றுமை அமைப்பின் உறுப்பு நாடுகளைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

ஹராரேயில் ஒரு பேரணியில் உரையாற்றுகையில், 'மனித உரிமைகளை விட பண ஆதாயத்துக்குப் பிரிட்டன் அதிக முக்கியத்துவம் அளிக்கிறது" என்று குற்றஞ்சாட்டினர்.

## மரண அறிவித்தல்

நெடுந்தீவு கிழக்கை பிறப்பிடமாக கெகண்ட

### க. கந்தையா

(லொறி உரிமையாளர்)

21-11-85 மல்லாவியில் காலமானார். அன்னரது ஈமக்கிரிகை 22-11-85 வெள்ளிக்கிழமை காலை மல்லாவியில் நடைபெறும் இவ்வறிவித்தலை உறவினர், நண்பர்கள்ஏற்றுக் கொள்ளவும்

இங்ஙனம் பிள்ளைகள்.

## 2500 ஏரிகள் உடைப்பெடுப்பு ரூ· 10 கோடி நஷ்டம்

(சென்னை)

சமீபத்தில் தமிழ்நாட்டில் பெய்த பெருமழையால் இரண்டாயிரத்து ஐநூறு ஏரிகள் உடைப்பெடுத்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது;

இதனல் பத்துக்கோடி ரூபா நஷ்டம் விளைந்துள்ளதாகவும் அதிகாரிகள் மதிப்பிட்டுள்ளனர்.

### புதிய தலைமைச் செயலர்

(லண்டன்)

லண்டனில் இருக்கும் கானதூதுவர் திரு. டென்னத் டாக்ஸி ஐ. நா. வாணிப வளர்ச்சி மாநாட்டின் புதிய தலைமைச் செயலாராக நியமிக்கப்பட்டுள்ளார்.

22 11 1985 வெள்ளிக்கிழமை

# ஈழமுரசு

⌘ சென்னை நிருபருக்கு நெடுமாறன் பேட்டி!
⌘ தமிழரும் ''தூள்'' வியாபாரமும்
⌘ டெல்லி கைகழுவ தமிழகம் கைகொடுக்குமா?
⌘ சாயிபாபா ஹெலிகொப்டரில் தரிசனம்!

செய்திக்கதிர்
இருவார செய்தி விமர்சனத் தொகுப்பு

16 - 30 நவம்பர் 85 - வாசியுங்கள்!

திருநகர் சம்பவம்-நேரில் கண்டவர் கூறுகிறார்:

# ரோக்கட் லோஞ்சரால் வீட்டில் தீப்பற்றியது சீருடையினர் சடலத்தை இழுத்துச் சென்றனர்!

(கிளிநொச்சி)

''ஞாயிறன்று அதிகாலை 5 மணியிருக்கும். எனது வீட்டிலிருந்து சுமார் நூறு யார் தொலைவில் நாலைந்து பேர் கதைப்பது போல் சத்தம் கேட்டது. பின்னர் ஒரு குண்டுச் சத்தத்தைத் தொடர்ந்து தொடர்ச்சியாக துப்பாக்கி வேட்டுக்கள் தீர்க்கப்பட்டன. என்ன நடக்கிறது என்பது புரியாமல் வெளியே வந்து எட்டிப் பார்த்தேன். நெருப்புப் பந்து போன்று ஒரு பொருள் எனது வீட்டைத் தாக்கியது. திடீரென வீடு முழுக்க புகைமண்டலமானது.''

கடந்த ஞாயிறு 17-ம் திகதி திருநகர் சம்பவத்தின்போது தனது வீடு 'ரொக்கட் லோஞ்சர்' போன்ற ஒரு ஆயுதத்தால் தாக்கப்பட்டு சேதப்படுத்தப்பட்டபோது தெய்வாதீனமாக உயிர் தப்பிய திரு. அருளானந்தம் ஜேக்கப் (வயது 57) என்பவர் தனது நேரடி திகில் அநுபவத்தை விளக்கும்போது இவ்வாறு கூறினார்.

அவர் தொடர்ந்து விபரிக்கையில்:

''எனது மகள்மாரும் உறவினர்களுமாக ஐந்து இளம் பெண்கள் ஒரு அறைக்குள் படுத்திருந்தனர். அவர்களுக்கு ஏதும் நடந்துவிட்டதோவென சென்று பார்த்தேன். அந்த அறை தாக்கப்படாததால் அவர்களுக்கு எவ்வித ஆபத்தும் ஏற்படவில்லை. நெருப்புத் தணல்கள் பறந்து விழுந்ததால் ஒருவருக்கு மட்டும் காலில் சிறு காயமேற்பட்டது.

உடனே அவர்களை அழைத்துக்கொண்டு ஒன்றுவிட்ட என் சகோதரியான கலைஞ்சென்ற ஆசிரியை திருமதி பெர்ணண்டோ வீட்டுக்கு ஓடினேன. அங்கிருந்த அவரின் பிள்ளைகளையும், எனது பிள்ளைகளையும் பின்புறமாகக் கூட்டிச் சென்று ஒரு வீட்டில் விட்டு விட்டு திரும்பிவரும்போது மீண்டும் துப்பாக்கிச் சத்தங்கள் கேட்டன. உடனே நான் ஒரு மலசல கூடத்துக்குப் பின்னால் ஒளிந்து கொண்டு நின்று நடப்பதை அவதானித்தேன். பச்சை நிற சீருடை அணிந்த சிலர் அங்குமிங்கும் நடமாடிக் கொண்டிருந்தனர். இருவர் ஒருவரின் சடலத்தை இழுத்துககொண்டு சென்றனர் அந்நேரத்தில் அது ஆணு பெண்ணு என்பது அனுமானிக்க முடியவில்லை. தூரத்தில் சைக்கிளில் வந்த இருவர் இரத்த வெள்ளத்தில் விழுந்து கிடந்தனர். சிறு நேரத்தில் இரண்டு பஸ் வந்து சென்றது ஆறரை மணியளவில் சீருடையினர் அவ்விடத்தை விட்டு அகன்றனர்.

பின்னர் திருநகர் வீதிக்கு வந்து பார்த்தபோது வீதியில் பல இடங்களில் இரத்தம் சிந்தப்பட்டு காணப்பட்டது. சைக்கிள்கள் ஆங்காங்கே வீதியில் கிடந்தன. ஆசிரியை வீட்டு முற்றத்தில் அவரின் செருப்பு கிடக்கக் காணப்பட்டது. தேடிப் பார்த்தோம். அவரைக் காணவில்லை. அன்று பத்து மணியளவில் கிளிநொச்சி பொலிஸ், இராணுவ கூட்டு முகாமுக்குச் சென்று இறந்த இரு சடலங்களைக் கண்ணுற்றபோதுதான் தெரிந்தது அதிலொன்று ஆசிரியையின் உடல் என்பது'' என்று அவர் தெரிவித்தார்.

## கண்காணிப்புக்குழு செய்திக்குத் தடை

யுத்த நிறுத்தக் கண்காணிப்புக்குழு தொடர்பான எந்தச் செய்தியையும் வெளியிடுவதற்கு 'கஸட்' மூலம் தடை விதிக்கப்பட்டுள்ளது. குழுவினரால் வெளியிடப்படும் தகவல்களை மட்டுமே வெளியிடமுடியும்.

### அகதி...

— 1ம் பக்கத் தொடர்

விடுவிக்கப்பட்டனர்.

பறிமுதல் செய்யப்பட்ட மருந்து வகைகளை மீளவும் பெற்று அகதி முகாம்களில் பயன்படுத்துவதற்கு மன்னார் அகதிகள் புனர்வாழ்வுக் கழகமும், மன்னார் அரச அதிபர் ஜனப். மகபூவும் முயற்சிகள் எடுத்துள்ளனர்.

இந்தச் சம்பவத்தையடுத்து வெளி மாவட்டங்களுக்கு, அகதி முகாம்களின் தேவைகளை நிறைவேற்று முகமாக மருந்துப் பொதிகளையும் பிற பொருட்களையும் ஏற்றுக் கொள்வதற்கு வட பிரதேச போக்குவரத்துச் சபையினர் மிகுந்த தயக்கம் காட்டி வருகின்றனர். இதன் விளைவாக அத்தியாவசியமான ஆனால் யாழ்ப்பாணத்தில் மட்டும் பெறப்படக் கூடிய மருந்து வகைகளுக்கு வெளி மாவட்ட அகதிமுகாம்களில் தட்டுப்பாடு ஏற்படுகிற அபாயம் உள்ளது.

### அன்புள்ள...

= 1ம் பக்கத் தொடர்

அசௌகரியத்தை ஏற்படுத்துவது மட்டுமன்றிப் பாதுகாப்புப் படையினருக்கு ஓர் இக்கட்டான நிலையையும் உருவாக்குகின்றது ஆகவே, சோதனை நடத்தப்படும்போது பொறுமையாக இருந்து பாதுகாப்புப் படையினருக்கு உதவுமாறு உங்களை வேண்டிக் கொள்கின்றோம். அப்பொழுது ஆகக்குறைந்த வசதியீனமே உங்களுக்கு ஏற்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இப்பொழுது வயோதிபர், வலுவற்றவர், பெண்கள், சிறுவா ஆகியோரை அவர்கள் பிரயாணம் செய்யும் வாகனங்களிலிருந்து பாதுகாப்புப் படையினர் இறங்கச் சொவதில்லை எனவும் இதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## டானியலின் ''அடிமைகள்'' நாவல் வெளியீட்டு விழா

பிரபல எழுத்தாளர் டானியலின் 'அடிமைகள்' நாவல் வெளியீட்டுவிழா எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை காலை ஒன்பது மணிக்கு நல்லூர் சாதனா பாடசாலையில் நடைபெறவுள்ளது.

திரு. சொக்கன் தலைமையில் நடைபெறும் இவ்விழாவில் திருவாளர்கள் கே. தங்கவடிவேல், சி. சிவலிங்கராசா, தெணியான், இ.ச.நாகராசா, தேவி பரமலிங்கம், வீ. சின்னத்தம்பி ஆகியோர் கருத்துரை வழங்குவர்.

பேராசிரியர் அ. சண்முகதாஸ் வெளியீட்டுரை நிகழ்த்துவார். நூலாசிரியர் உரை இறுதியாக இடம்பெறும்.

கலை இலக்கிய பத்திரிகை நண்பர்கள், மக்கள் கலை இலக்கியப் பெருமன்றம், பூபாலசிங்கம் புத்தகசாலை நிறுவனம் ஆகியவை இணைந்து இந்நிகழ்ச்சியை ஏற்பாடு செய்துள்ளன.

## உசனில் இரவு நேரத்தில் வாகனங்கள் செல்லத்தடை

(கொடிகாமம்)

உசன் கிராமத்திலுள் இரவு எட்டுமணிக்கும் அதிகாலை ஐந்து மணிக்குமிடையே எந்தவொரு விடுதலை இயக்கமோ, வாகனமோ செல்வதற்கு அனுமதிக்கப்பட மாட்டாதென ஒலி பெருக்கி மூலம் இப்பகுதிகளில் அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த மாதம் இங்கு இடம்பெற்ற கொள்ளைச் சம்பவத்தையடுத்து இரவு நேரத்தில் இப்பகுதியினூடாகச் செல்லும் வாகனங்கள் அனைத்தும் தடுத்து நிறுத்தப்பட்டு உசன் விழிப்புக்குழுவின் விசாரணையின் பின்னரே மேற்கொண்டும் செல்வதற்கு அனுமதிக்கப்பட்டு வந்தது.

எனினும் சில தினங்களுக்கு முன்னர் இடம்பெற்ற விழிப்புக்குழுவின் அவசரக் கூட்டத்தில் சில தேவைகளின் நிமித்தம் வாகனத்தடையை இரவு நேரத்தில் கண்டிப்பாக அமுலாக்குவதென தீர்மானிக்கப் பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

## சந்ததியார் கொலை விபரபிரசுரம்

சந்ததியார் படுகொலை செய்யப்பட்டது சம்பந்தமான பல விபரங்களைக் கொண்ட பிரசுரமொன்றை 'தீப்பொறி' குழுவினர் வெளியிட்டுள்ளனர். ''கொலையுண்டது ஒரு சந்ததி; கிளர்ந்தெழுகின்றது புதிய சந்ததி'' என்று தலைப்பிட்டு இப்பிரசுரம் வெளியிடப்பட்டுள்ளது.

### வடக்கும்...

-1ம் பக்கத் தொடர்

தமிழீழக் குழுக்களின் தீர்க்கமான முடிவு அடுத்த ஒரு சில நாட்களில் புதுடில்லிக்கு அறிவிக்கப்படலாமென தெரிய வந்துள்ளது. அதற்கு முன்னர் சகல குழுக்களின முக்கியஸ்தர்களும் சென்னையில் கூடி நிலைமையை ஆராயவிருப்பதாகவும் தெரியவந்துள்ளது.

### 4 மாதத்

-1ம் பக்கத் தொடர்

ஜூலை மாதத்திற்குப் பின்னர் வந்தவர்கள் தமிழகத்திலுள்ள பதினான்கு மாவட்டங்களில் புதிதாக ஆரம்பிக்கப்பட்டுள்ள முப்பத்தெட்டு புதிய முகாம்களில் தங்கவைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

இவ்வருடம் பெப்பிரவரி மாதம் வரையில் இலங்கைத் தமிழ் அகதிகளுக்காக எண்பத்து நான்கு கோடியே பத்து இலட்சம் ரூபா செலவிடப்பட்டதாகவும் அமைச்சர் அருண்சிங் மேலும் தெரிவித்தார்.

## கண்காணிப்பு குழுவுக்கு பல அதிகாரம்

(கொழும்பு)

யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவுக்கு சில கூடுதல் அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளது பற்றி அரசாங்கம் கஸெற் மூலம் அறிவித்துள்ளது.

எந்தவொரு நவரையும் கண்காணிப்புக் குழு முன் சாட்சியமளிக்க அழைக்கவும், எந்தவொரு ஆவணத்தையும் ஒப்படைக்கும்படி உத்தரவிடவும் குழுவுக்கு அதிகாரமளிக்கப்பட்டுள்ளது.

அவசரகாலச் சட்டப்படி எந்தவொரு நபரும் இக் கட்டளையை ஏற்று நடக்கத்தவறின் ஒரு குற்றத்தைப் புரிந்தவராகக் கருதப்படுவார்.

## புதிய ஐ.ஜி.பி.

புதிய பொலிஸ் மாஅதிபராக திரு. சிறில் ஹேரத் நியமிக்கப்படவுள்ளார். தற்போதைய பொலிஸ்மா அதிபர் திரு. ஹேபர்ட் வீரசிங்கா ஓய்வுபெற்றபின்னர் வெளிநாட்டுத் தூதுவராகச் செல்லலாமெனத் தெரியவந்துள்ளது.

கம்யூனிஸ்ட் (இடது) கோரிக்கை

## மலையக இளைஞரை உடன் விடுதலை செய்ய வேண்டும்

நீண்டகாலமாகவிரக்திக்கும், வேதனைகளுக்கும் ஆளாக்கப்பட்ட மலையகமக்களை மேலும் விரக்திக்கு உள்ளாக்கி அவர்கள் மத்தியில் விபரீத விளைவுகளை ஏற்படுத்தாது அரசாங்கம் தடுத்து வைக்கப்பட்டுள்ள மலையக இளைஞர்களை உடன் விடுதலை செய்யவேண்டும் அல்லது நீதிமன்றத்தின்முன்விசாரணைக்காக ஆஜர்படுத்தப்படவேண்டும்.

இவ்வாறு இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் (இடது) அரசியற் குழு சார்பாக அதன் பொதுச் செயலாளர் திரு.கே. ஏ சுபபிரமணியம் வெளியிட்டுள்ள அறிக்கையிற் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் அவ் அறிக்கை தெரிவிப்பதாவது: மலையகத்தில் அறுபதுக்கு மேற்பட்ட இளைஞர்கள் கைதுசெய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் இவர்களில் பாடசாலை மாணவர்களும் உள்ளனர். மலையக இளைஞர்களும் பயங்கரவாதிகள் என்ற அரசின் பட்டம் சூட்டலுடனேயே இக்கைதும் தடுத்துவைத்தலும் இடம்பெறுகின்றன. அரசின் இவ்வாறான நடவடிக்கைகளுக்குப் பின்னால் ஒருவித உள்நோக்கம் உறைந்துள்ளதா என்ற சந்தேகம் உருவாகின்றது.

மலையக மக்கள் தலை நிமிர்ந்து தன்மானமுள்ள ஒரு சமுதாயமாக மாறவேண்டுமென்ற இன்றைய உணர்வின் முதுகெலும்பாகத் திகழ்பவர்கள் மலையக இளைஞர்களே. அதிலும் கல்வியின் அவசியத்தை உணர்ந்து கல்விக்கு முக்கியத்துவம் கொடுத்து வருபவர்களும் மலையக மாணவர்களாகவே உள்ளனர். எனவே மலையக இளம் சந்ததியை புதியவகை அடக்குமுறைகளுக்கு உள்ளாக்குவதால் மலையகமக்கள் அனைவரையும் அமுக்கி விடமுடியும் என்று அரசு நம்புவது போலவே தென்படுகிறது. அப்படியானால் அதன் விளைவு எதிர்காலத்தில் மிகவும் மோசமானதாகவே இருக்கும் எனவும் இதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### இரத்தம் தேவை

யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வரும் நோயாளி ஒருவருக்கு AB NEGATIVE குறூப் இரத்தம் உடனடியாகத் தேவை. தொடர்பு கொள்ள வேண்டியவிலாசம்:

10/1, சுவாட்ஸ் லேன்,
யாழ்ப்பாணம்.

### காசு...

றைய புகையிரத நிலையங்களிலும்கூட இதேநடைமுறையை அமுலுக்குக் கொண்டுவர புகையிரத இலாகா தீர்மானித்துள்ளதாக அதிகாரியொருவர் தெரிவித்தார்.

'ஈழமுரசு' சாயிபாபா அட்வர்டைசிங் அஸோஸியேற்ஸ் ஸ்தாபனத்தாரால் 37, கண்டி வீதி, யாழ்ப்பாணத்திலுள்ள அவர்களது அச்சகப் பகுதியில் 22-11-198 வெள்ளிக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது. தொலைபேசி: 23336